ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

13.03.2025

1. வாழ்க வாழ்க தொண்டர் பெருமக்கள்
வாழ்க வளர்க சன்மார்க்க அன்பர்கள்
ஊழ்வென்று ஞானிகளாகவே மக்கள்
உயர்வடைய அரங்கனும் குருவார அருளாசி

2. அருளாசி குரோதி சால் திங்களில்
அய்ந்தாம் குருவார ஆசியாக அருள்வேன்
வரம் தந்தேன் வந்து கலியினில்
வடிவேலனார் அம்சமாக யானே

3. யானருள ஏழாம் படை வீட்டில்
என்னோடு ஞானிகள் படைகளெல்லாம்
தானாக வந்து நல் ஆசி அருள
தரணியோர் பிரணவக்குடில் நோக்கி

4. நோக்கியே ஒருமுறை வந்தாலே
நிலமதனில் பலபிறவி தொடரும் வினையை
தேக்கமின்றி வென்று மீள்வர்
தேங்காமல் ஞானவாழ்வில் சிறப்பர்

5. சிறப்பான சரவண சோதி வழிபாடே
சித்திதரும் வழிபாடு என உணர்ந்து
மறுப்பின்றி உள் சோதி கலந்துணர்ந்து
மகான்களை அறியும் அடையும் வழி பெறுவர்

6. வழிகாட்டும் அரங்கன் என் சன்மார்க்கம்
வையகத்தையே ஞான உலகாக்கும் மார்க்கம்
தெளிவுபெற என் சீடர் ராம்குமார் கரம்பட
தேடிவந்து தீட்சைபல ஏற்று வணங்க

7. வணங்கவே அரங்கனும் காட்சி தந்து
வழிகாட்டி அகலா உடனிருப்பேன்
வணங்கி அன்னதான சேவையில் உதவி
வரம் தா என தருமபலம் கூட்டிட

8. கூட்டிட குறைகளெல்லாம் விலகும்
குறிப்பாக தேகமனபலம் கூடியே
வாட்டம் கட்டம் தனமுடை இல்லா
வருங்காலம் வளமுடன் பாதுகாப்பாக மாறும்

9. மாறவே மாசி மகம் பூரம் முழுமதியில்
மகா சோதியாம் ஓங்காரக்குடில் சோதியில்
ஆறுமுக அரங்கனும் காட்சி தருகிறேன்
அன்னதனால் வந்து கலந்து சோதி வழிபாடு செய்ய

10. செய்துமே அன்னதானப் பணியில்
செப்பிட பொருளுதவி செய்தும்
அப்பனே அரங்கா முருகா வா என
அற்புத காட்சி தா என அழைக்க

11. அழைக்கவே சரவண சோதியில்
அக்கணமே அரங்கனாக முருகனாக
கலசமுனியாக மகா சுடராக எழும்பி
கலியுகத்தார்க்கு நல் காட்சித் தருவேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி